**சுருக்கம்**

தகவல் தொழில்நுட்பவியல் துறை – பணியமைப்பு - துறையின் பெயர் மாற்றம் - தமிழ்நாடு தலைமைச் செயலகத்தின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் பெயரை "தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தகவல் தொழில்நுட்பவியல் (அநமு 1) துறை**

அரசாணை (நிலை) எண். 28

நாள்: 14.06.2022
சுபகிருது, வைகாசி – 31,
திருவள்ளுவர் ஆண்டு –2053.

படிக்கப்பட்டது:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடர் 2022-23-இன் போது மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு.

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2022-23 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண்.31-இன் போது மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்.

மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் மற்றும் மின்-ஆளுகையின் வளர்ச்சியை உறுதிசெய்யும் நோக்கத்துடனும் தகவல் தொழில்நுட்பவியல் துறை 05.10.1998 அன்று உருவாக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைத் துறைகளின் வளர்ச்சியானது ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகும். எனவே, ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைவதற்கு முன்முயற்சியுடன் கூடிய ஒருங்கிணைந்த கொள்கைவழி அணுகுமுறை தேவைப்படுகிறது.

முதல் கட்டமாக, வளர்ந்துவரும் தொழில்நுட்பப் பிரிவுக்கு தலைமை தாங்கும் வகையில் தலைமை தொழில்நுட்ப அதிகாரி பதவி தகவல் தொழில்நுட்பவியல் துறையில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் மற்றும் ஆழ்நிலைத் தொழில்நுட்பங்களில் தொடக்கநிலை

த.பி.பா

நிறுவனங்கள் மூலம், புதுமைகளை உருவாக்குவதற்கு ஏதுவாக, தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub) ஒன்று சென்னையில் அரசால் நிறுவப்பட்டு வருகிறது.

எனவே, மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்ப சேவைகளின் வளர்ச்சியை வலுப்படுத்த இத்துறை "தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை" என மறுபெயரிடப்படும்.

2. மாநிலத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் மின்-ஆளுமையின் உருவாக்கத்திற்கும் ஆதரவு அளிக்கும் நோக்கத்திலேயே தகவல் தொழில்நுட்பவியல் துறை 05.10.1998 அன்று உருவாக்கப்பட்டது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்தே தகவல் தொழில்நுட்பம், மின்னணு மற்றும் தகவல் தொடர்பு குறித்த அனைத்துப் பொருண்மைகளையும் கையாண்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைத் துறைகளின் வளர்ச்சி என்பது ஒன்றோடொன்று தொடர்புடையவை. எனவே, ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைவதற்கு, ஒருங்கிணைந்த அணுகுமுறைக் கொள்கை ஒன்று தேவைப்படுகிறது.

3. வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பச் சேவைகளை வலுப்படுத்திடும் வகையில், தலைமைச் செயலகத்திலுள்ள தகவல் தொழில்நுட்பவியல் துறையின் பெயரை

தமிழில் "**தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை**"

என்றும்

ஆங்கிலத்தில் "**Information Technology and Digital Services Department**" என்றும் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

4. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு அலுவல்முறை விதிகள், 1978 மற்றும் தலைமைச் செயலக அறிவுரைகளில் உரிய திருத்தங்கள் கொண்டு வர மனித வள மேலாண்மைத் துறை கோரப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நீரஜ் மித்தல்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

அனைத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / முதன்மைச் செயலாளர்கள் / செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை -09.

த.பி.பா

அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை -09.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் இயங்கும் அனைத்துத் துறைத் தலைவர்கள், தலைமைச் செயலகம், சென்னை -09.

மாண்புமிக ஆளுநர் அவர்களின் செயலாளர்,
ராஜ்பவன், கிண்டி, சென்னை -22.

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை -09.

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -09.

தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை 09.

நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை -09.

மனித வள மேலாண்மைத் துறை செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை -09.

தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை -09.

கணக்குத் தணிக்கை அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை -09.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பிரிவுகள், தலைமைச் செயலகம், சென்னை -09.

**நகல்:**

அனைத்து மாண்புமிகு அமைச்சர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை -09.

உள் தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை -09.

மனித வள மேலாண்மை (அ) துறை, தலைமைச் செயலகம், சென்னை -09.

பற்றாளர், உள்ளடக்க மேலாண்மை அமைப்பு,
தலைமைச் செயலகம், சென்னை -09.

பற்றாளர், இ-மின் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை -09.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 15/6/22

15/6/22